<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

COS.No.27/2025 பெயர் : N.முருகவேல் நாள் : 14.07.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1: பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் ஜெய்கணபதி மார்க்கெட்டிங் என்ற பெயரில் கெமிக்கல் வியாபாரம் செய்து வருகிறேன். பிரதிவாதி சரவணன், சரண்யா பிராசஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறார். அதேபோல் காமாட்சி அம்மன் பிராசஸ் என்ற பெயரில் நடேசன் என்பவர் தொழில் செய்து வருகிறார் என்றால், சரிதான். பிரதிவாதி சரண்யா பிராசஸ் என்ற பெயரில் தனியாக தொழில் செய்து வருகிறார் என்றால், சரிதான். அதேபோல் தனி விலாசத்தில் தனி RC உடன் நடேசன் தொழில் செய்து வருகிறார் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 ஆவணம் STC No.429/2022 மற்றும் STC No.442/2022 ஆகிய வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அந்த வழக்குகளில் பிரதிவாதி வங்கி மேலாளரை அவரது தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது என்றால், சரிதான். அதில் சுமார் ரூ.1,50,000/-க்கான கணக்கு காட்டப்பட்டு, அது நான் தாக்கல் செய்த வரவு, செலவுடன் வித்தியாசப்பட்டதால், மேற்படி இரு வழக்குகளிலும் பிரதிவாதி விடுதலை செய்யப் பட்டார் என்றால், சரிதான். இ.ம.எண்.2/2026 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் நடேசன் என்பவருடைய காமாட்சி அம்மன் பிராசஸ் சம்மந்தமானது என்றால், சரிதான். நான் இந்த வழக்கில் ரூ.6,27,525/- கேட்டுள்ளது தவறான கணக்கின்

அடிப்படையில் என்று சொன்னால், சரியல்ல. அதேபோல் 18% வட்டி கோரியுள்ளதற்கும் எந்தவித ஆவணங்களும் இல்லை என்று சொன்னால், சரியல்ல. நான் கேட்டுள்ள ரூ.9,52,204/- தொகை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**